# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>79ஆவது இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்</u>

இந்தியாவின் 79ஆவது சுதந்திர தினம் 2025 ஆகஸ்ட் 15 ஆம் திகதி இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டிருந்தது. கொழும்பில் நடைபெற்ற பிரதான நிகழ்வுகள் இந்திய உயர் ஸ்தானிகரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் இந்திய தேசிய கொடியினை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையினை பார்வையிட்டிருந்தார். அத்துடன் 79ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தேசத்திற்கு ஆற்றப்பட்ட உரையின் முக்கிய அம்சங்களும் உயர் ஸ்தானிகரால் வாசிக்கப்பட்டிருந்தது.

2. பல்வேறு கலாசார நிகழ்வுகள் இந்தக் கொண்டாட்டங்களுக்கு மேலும் பிரமிப்பூட்டியிருந்தன. இலங்கை கடற்படையினரின் இசைக்குழாமினர் வீரத்தினையும் தேசப்பற்றினையும் பிரதிபலிக்கும் மெட்டுகளை இந்த நிகழ்வுகளில் இசைத்திருந்த அதேவேளை சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் மாணவர்கள் பிரபலமான தேசப்பற்று பாடல்களுக்கு தமது ஆற்றுகைகளை அரங்கேற்றி இருந்தனர்.

3. இதேவேளை இலங்கையில் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் பாதுகாப்பதற்காக தமது உயிரை தியாகம் செய்த இந்திய படையினரின் அதியுயர் தியாகத்தினை நினைவு கூரும் வகையில் இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவுத்தூபியில் இந்திய உயர் ஸ்தானிகரும் இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகளும் அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

4. கண்டியில் உள்ள துணை உயர் ஸ்தானிகராலயம், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உள்ள கொன்சுலேட் ஜெனரல் காரியாலயங்களும் சுதந்திர தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தன.

5. இன்று மாலை நடைபெறவிருக்கும் பிரமாண்டமான கலாசார நிகழ்வாக உலகளவில் பிரசித்தம்பெற்ற வயலின் மேதை கலாநிதி எல்.சுப்ரமணியம் மற்றும் பிரபல பின்னணி பாடகி கவிதா கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியம் ஆகியோர் பங்கேற்கும் “Bollywood and Beyond” இசை நிகழ்வு இந்தியாவின் 79வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு 07ல் அமைந்துள்ள தாமரை தடாக அரங்கத்தில் மாலை 6 மணி அளவில் நடைபெற உள்ளது. இக்கொண்டாட்டங்களுக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியவை இணைந்து ஹெவ்லொக் சிட்டி மாலில் India Fest 2025 என்ற மூன்று நாள் கொண்டாட்டத்தினை 2025 ஆகஸ்ட் 15 முதல் 17 ஆம் திகதி வரை நடத்துகின்றன. இந்த நிகழ்வில் இந்திய கைவினைப் பொருட்கள், ஆடைகள்,

உணவுகள் உள்ளிட்டவற்றின் கண்காட்சிகள், இசை நிகழ்வுகள், திரைப்பட காட்சிப்படுத்தல் மற்றும் ஏனைய கலாசார நிகழ்வுகள் இந்தியாவின் உயர்ந்த மரபு குறித்த ஒரு மகத்தான அனுபவத்தினை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

*********

கொழும்பு,
**15 ஆகஸ்ட் 2025**